தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை.600 006
ந.க.எண்.011649/ஜ2/2012, நாள் 19.06.12

----

பொருள் .. தமிழ்நாடு தொடக்கக் கல்வி சார்நிலைப்பணி – உதவி / கூடுதல் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் கலந்தாய்வு பொதுமாறுதல் நடைபெறுவது - சார்பாக.

பார்வை .. அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களின் மாறுதல் விண்ணப்பங்கள்.

----

2012-2013ம் கல்வியாண்டில் உதவி/கூடுதல் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு கலந்தாய்வு பொதுமாறுதல் வழங்குதல் சார்ந்து கீழ்க்குறிப்பிட்டுள்ள இடத்தில் நடைபெற உள்ளதால் மாறுதல் கோருபவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவுறுத்த அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**நாள் - 23.06.2012- கலந்தாய்வு பொதுமாறுதல்**
**நடைபெறும் இடம் - தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை.6.**
**நேரம் - காலை 10.00 மணி**

**<u>கலந்துகொள்ள தகுதிகள்</u>**

1. உதவித் தொடக்கக் கல்வி அலுவலராக ஓராண்டு பணிமுடித்து மாறுதல் கோரும் அனைவருக்கும் பரிசீலனை செய்யப்படும்.
2. நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் பணியிலிருந்து உதவித் தொடக்கக் கல்வி அலுவலராக பணிமாறுதல் பெற்று ஓராண்டிற்கும் குறைவாக உள்ளவர்களுக்கும் பரிசீலனை செய்யலாம்.

<u>கலந்துகொள்ள வருபவர்கள் கீழ்கண்ட ஆவணங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.</u>

1. பணிபுரியும் அலுவலரின் முழுவிவரங்களுடன் கூடிய படிவத்தில் அன்னாரது நிழற்படம் ஒட்டப்பட்டு மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரின் மேலொப்பம் பெறப்பட்டிருக்கவேண்டும்.

தொடக்கக் கல்வி இயக்குநர்.

பெறுநர்

அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள்.

www.TeacherTN.com

தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை.600 006
ந.க.எண்.37735/ஐ2/2010, நாள் 19.06.12

----

பொருள் .. தமிழ்நாடு தொடக்கக் கல்வி சார்நிலைப்பணி – உதவி / கூடுதல் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் பொதுமாறுதல் மற்றும் தகுதிவாய்ந்த நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு உதவித் தொடக்கக் கல்வி அலுவலராக பணிமாறுதல் வழங்குதல் – சார்பாக.

பார்வை 1. தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 37735/ஐ2/2010 நாள் 22.11.2011.
2. தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 37735/ஐ2/2010 நாள் 28.12.2011.

----

2011-2012ம் கல்வியாண்டில் தகுதிவாய்ந்த நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு **வகுப்பு 1 வகை 2 (Class I. Category 2)** இருந்து உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களாக **வகுப்பு- 1 வகை 1 (Class I. Category 1)** பணிமாறுதல் வழங்குதல் சார்ந்து, பார்வை 1ல் காணும் இயக்குநரின் செயல்முறைகளில் முன்னுரிமைபட்டியல் வெளியிடப்பட்டது.

மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் மூலம் பெறப்பட்ட முன்னுரிமைப்பட்டியலில் மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு திருத்திய முன்னுரிமைப்பட்டியல் பார்வை 2ல் காணும் இயக்குநரின செயல்முறைகளில் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்காண் பணிமாறுதல் கீழ்க்குறிப்பிட்டுள்ள இடத்தில் 24.06.2012 அன்று நடைபெற உள்ளதால் பணிமாறுதல் கோரும் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவுறுத்த அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**கலந்தாய்வு நடைபெறும் இடம் - தொடக்கக் கல்வி இயக்ககம்,**
**சென்னை-6.**
**நாள் - 24.06.20121 காலை 10.00 மணி.**

பணிமூப்பு அடிப்படையில் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணிமாறுதலுக்கு தகுதிவாய்ந்த நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்க பணிமாறுதல் அளிக்கப்படும்.

அ. ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடி நியமனத்திற்கு ஒதுக்கப்பட்ட 34 பணியிடங்களைத் தவிர்த்து எ சியுள்ள பணியிடங்களுக்கு மட்டுமே நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர் முன்னுரிமைப்பட்டியலின்படி வ.எண். 211 முதல் 250 முடிய உள்ளவர்களுக்கு உதவித் தொடக்கக் கல்வி அலுவலராக பணிமாறுதல் வழங்கப்படும்.

கலந்துகொள்ள வருபவர்கள் கீழ்கண்ட ஆவணங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.

1. பணிபுரியும் அலுவலரின் முழுவிவரங்களுடன் கூடிய படிவத்தில் அன்னாரது நிழற்படம் ஒட்டப்பட்டு உதவித் தொடக்கக் கல்வி அலுவலரின் மேலொப்பம் பெறப்பட்டிருக்கவேண்டும்.

தொடக்கக் கல்வி இயக்குநர்.

பெறுநர்

அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள்.

www.TeacherTN.com